**பிடபெத்தர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிடபெத்தர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் அன்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 17,649,179 ஆன பெகோ லோடரின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் 02 மோட்டார் வண்டிகளின் பெறுமதி ரூபா 2,791,000 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மாகாணத்திற்கான அபிவிருத்தி நன்கொடையின் கீழ் வீதி அபிவிருத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 797,153 ஆன பணத்தை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை மூலம் மின்சார சபையில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 16,500 ஆன பாதுகாப்பு பிணைவைப்புப் பணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 108,530,673 ஆன 11 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவை தொடர்பான துணைப் பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் காட்டப்பட்ட மீதிகளின் இடையில் கூட்டுத்தொகை ரூபா 4,457,519 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 தொங்கல் கணக்கு**

முன்னைய ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 4,392 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

நிலுவையான ஏனைய வருமான மீதிகளில் 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 1,180,115 ஆன 161 மீதிகளும், 3 வருட காலத்தை விஞ்சிய ரூபா 934,087ஆன மீண்டும் செலுத்த வேண்டிய 356 வைப்பு மீதிகளும், முன்னைய ஆண்டு முதல் முன்கொண்டுவரும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 624,939 வும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 51,014,571 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பான நாளாதுவரையாக மற்றும் முறையாக பேணப்பட்ட நிலையான சொத்து பதிவேடும், ரூபா 5,044,324 ஆன மூலதன உதவி, ரூபா 9,283,339 ஆன முத்திரைக் கட்டணம் மற்றும் நீதி மன்றத் தண்டப் பணமும், தொடர்பான பதிவேடுகளும், கூட்டுமொத்தம் ரூபா 3,522,816 ஆன நாநாவித கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய வைப்பு தொடர்பான பட்டோலையும், சமர்ப்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்வதற்கு இயலாமலிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 பிரகாரம் பாதீட்டு மற்றும் குறைநிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினம் விஞ்சிய வருமானம் ரூபா 6,205,712 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினம் விஞ்சிய வருமானம் ரூபா 6,897,611 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 691,899 ஆன வீழ்ச்சி காட்டப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மொத்த மீண்டுவரும் செலவுகள் தொடர்பான சுருக்கமான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 42,234,116 | 24,757,178 | 17,476,938 | 36,028,404 | (18,551,466) |
| 2014 | 35,977,675 | 17,830,084 | 18,147,591 | 29,080,064 | (10,932,473) |
| 2013 | 28,183,807 | 10,716,194 | 17,467,613 | 22,713,680 | (5,246,067) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒவ்வொரு வருடத்திலும் வருமான உதவிகளில் அதிகரிப்பு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சுய சம்பாதிப்பு வருமானங்களில் ரூபா 670,653 ஆன குறைவொன்று காட்டப்பட்டது.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் கனிசமான பெறுமானத்தில் அதிகரித்து இருந்த போதிலும், அந் நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதன் மீது சபையின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபைக்கு வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள்நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

## 2.3 வருமானம் நிருவாகம்

### 2.3.1 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 229,640 ஆனதுடன், ஆண்டினுள் அறவிடல் ஆரம்ப மீதிகளின் 05 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 25 சதவீதம் ஆனது. எவ்வாராயினும், நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ள ரூபா 70,522 ஆன நிலுவை மீதியின் மீளாய்வாண்டினுள் எவ்வித பணமும் அறவிடுவதற்கு சபை இயலாமை இருந்தது.

### 2.3.3 வாடகை

கூட்டுத்தொகை ரூபா 1,438,414 ஆன ஆரம்ப நிலுவை மீதியின் 26 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததனால், வருடம் இறுதியில் நிலுவை வாடகை மீதி ரூபா 1,427,373 ஆன உயர் பெருமானத்தை கொண்டிருந்தது.

### 2.3.4 நீர் கட்டணம்

ஆரம்ப நிலுவையின் 39 சதவீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலின் 61 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததனால் ஆண்டு இறுதியில் நிலுவை மீதி ரூபா 1,056,232 ஆன உயர் பெருமானத்தை கொண்டிருந்தது.

### 2.3.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 694,307 வும் முத்திரைக் கட்டணமாக ரூபா 8,589,033 பெறவேண்டியதாக உள்ளது.

# 3 செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

மூலதன வேலை முன்மொழிவுகளைசெயற்படுத்தலின் முன்னேற்றம்

2015 ஆண்டின் மதிப்பிடப்பட்ட மூலதன செலவினம் ரூபா 148,260,000 ஆன போதிலும் உள்ளவாறான மூலதன செலவு ரூபா 2,745,089 ஆனதில் மூலதன வேலை செயற்படுத்தலின் முன்னேற்றம் 2 சதவீதத்திலும் குறைந்த அளவில் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியில் ஆளனியில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ 15 மேலதிக ஊழியர் எண்ணிக்கையை முறையாக்கிக்கொள்ளவோ சபை மூலம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு திறமையின்மை**

**3.3.1 ஆதன கடன் வட்டி மீள்நிரப்பு**

சபை அலுவலகர்களுக்கு வழங்கப்பட்ட ஆதனக் கடனிற்கான வங்கி வட்டியின் ரூபா 237,135 ஆன பணம் மீளாய்வாண்டு இறுதியிலும் உள்ளூராட்சி ஆணையாளரினால் மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 ஊழியர் கடன்**

சபை அலுவலகர்களுக்கும் ஊழியர்கலுக்கும் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 133,800 ஆன கடன் மீதிகளிற்கான கடன் தவனை மற்றும் வட்டி அறவீடு ஓர் ஆண்டிற்கும் அதிக காலமாக நிலுவையாக காணப்பட்டன.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 02 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சிய ரூபா 380,467 ஆன செலவும், 05 செலவின விடயங்களின் ரூபா1,224,101 ஆன சேமிப்பும், 04 வருமான விடயங்களின் எதிரடையான விலகல்களின் கூட்டுமொத்தம் ரூபா 722,076 ஆனமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 404,163 செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு செயளாற்றுகை**

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 32,449,752 ஆன 5 வாகனங்கள் மீளாய்வாண்டில் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அல்லது வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து 2015 மார்ச் 06 ஆம் திகதி கிடைத்திருந்த கிரயம் ரூபா 7,389,200 ஆன தனி டிரம் உருளை வண்டியும் மீளாய்வாண்டில் ஓட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

02 மோட்டார் வண்டிகளும் ரூபா 800,000 மதிப்பீட்டு பெறுமதியுடைய மஹஓவிற்ற கும்புற எனும் காணியும் சபை மூலம் ஓர் ஆண்டையும் விஞ்சிய காலத்திலிருந்து பயன்படுத்திக்கொண்டு இருந்த போதும், அவற்றின் உரிமையை சபைக்கி சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **வருடாந்த பண்டக் கணிப்பீடு**

2015 திசெம்பர் 31 திகதி மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீடு அறிக்கையின் பிரகாரம் 07 வகைகளுக்குரிய பண்டக பதிவேட்டு உபகரண அலகுகளின் பற்றாக்குறை 49 நிலவியதாக வெளிப்படுத்தப்பட்ட போதும் அது தொடர்பாக முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.

(இ) நிதிக் கட்டுப்பாடு.

(ஈ) வருமான நிருவாகம்.

(உ) மனித வள முகாமைத்துவம்.

(ஊ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்.